**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS.No. 143/2015**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | தனசேகர் | TALUK | |
| HUSBAND NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 08-07-2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தான் தனசேகர் என்பதற்கு அடையாளமாக எந்த அடையாள அட்டையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயிலில் போட்டதாக சொல்லப்படும் என்னுடைய கையெழுத்து அப்படிதான் இருக்கும் என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் இருந்து சம்மன் பெற்ற பிறகு யாரை சந்தித்து விவரம் தெரிந்துகொண்டேன் என்றால் நேரடியாக நீதிமன்றத்திற்கே வந்துவிட்டேன்.

2. உயிலில் போட்டதாக சொல்லப்படும் என்னுடைய கையெழுத்தையும் சார்வு செய்யப்பட்ட சம்மனில் உள்ள எனது கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். எனது முழு முகவரி என்னவென்றால் ஜே.தனசேகரன், கோப்பம்பட்டி கிராமம், உள்ளி HO, அனங்கா நல்லூர் போஸ்ட், குடியாத்தம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10வது வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயி.

3. நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை கடைசியாக யார் காட்டினார்கள் எங்கு வைத்து காட்டினார்கள் என்றால் வக்கீல் காட்டினார் நீதிமன்றத்திற்கு வெளியில் வைத்து காட்டினார். இன்று நீதிமன்றத்திற்கு என்னை தனசேகரன் அழைத்து வந்தாரா என்றால் இல்லை. உள்ளி HO என்றால் என்னவென்றால் அப்படிதான் போடுவார்கள் உள்ளி Head Quarters.

4. நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தில் எனது கையெழுத்துக்கு கீழே உள்ளி HO என குறிப்பிடப்பட்டுள்ளது அதை தான் வாதியின் வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு வெளியே என்னிடம் காட்டி சாட்சியம் அளிக்க சொன்னதால் குறிப்பிட்டு உள்ளி HO எனசொல்கிறேன் என்றால் சரியல்ல, உள்ளி HO என்று தான் எல்லோரும் கூப்பிடுவார்கள். நான் வாதி தரப்பில் பயிற்சி அளிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல.

5. கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் உயிலில் உள்ள எனது முகவரியில் குறிப்பிட்டுள்ள வார்த்தைகள் என்னவென்றால் ஜே.தனசேகரன், S/o.ஜெயராமன் முதலியார், கோப்பம்பட்டி விலேஜ், அனங்காநல்லூர் போஸ்ட், உள்ளி HO, குடியாத்தம்

தாலுக்கா. உயிலில் உள்ள முகவரிக்கும் தற்போது நீதிமன்றத்தில் சொல்லிய முகவரிக்கும் முரண்பாடு உள்ளது என்றாலும் அதனால் நான் உயிலில் கையெழுத்திட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. உயில் எழுதிய நபர் நல்ல மனநிலையில் அப்போது இருந்தார் என என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் அவர் நல்ல மனநிலையில் தான் இருந்தார். உயில் எழுதியவர் வற்புறுத்தல் இன்றி, கட்டாயம் இன்றி சுயவிருப்பத்தால் உயில் எழுதினார் என என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்திட்டதாக சொல்லப்படும் உயில் எத்தனை பக்கம் உள்ளது என சொல்லமுடியாது என்றால் எனக்கு தெரியாது. நான் போட்டதாக சொல்லப்படும் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று சொல்ல முடியாது என்றால் சாட்சியாக ஒரு கையெழுத்து தான் போட்டேன்.

7. உயில் எழுதியதாக சொல்லப்படும் நபருக்கு அந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டதென எனக்கு தெரியாது என்றால் அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என தெரியும். பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என எப்படி எனக்கு தெரியவந்தது என்றால் அவரது அப்பாவிற்கு பாத்தியப்பட்டு அவருக்கு வந்த சொத்து என தெரியும். யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றாலும் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லவில்லை என்றால் உயில் பதிவு செய்தபோது தாய் பத்திரத்தை பார்த்தேன் அதன் மூலம் அவரது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து அவருக்கு வந்ததாக தெரிந்தது அந்த தாய் பத்திரம் பற்றி தற்போது ஞாபகமில்லை.

8. கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் உயிலில் அடித்தல் திருத்தல் உள்ளதா, வெற்றுப்பக்கம் உள்ளதா என எனக்கு தெரியாது என்றால் சரிதான். 30.07.2007 அன்று எழுதப்பட்டதாக சொல்லப்படும் உயிலை எழுதியவர் அன்றிலிருந்து 19 தினங்களில் 19.08.2007 அன்று இறந்துவிட்டார் என்றாலும் அதனால் அவர் மேற்படி உயிலை எழுதிகொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தீனதயாளனின் வாரிசுகள் என்னோடு தற்போது நட்பாக இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள்.

9. உயில் எழுதியவர் தற்போது உயிரோடு இல்லை என்றாலும் அந்த உயிலில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றாலும் அந்த உயிலில் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் நபர் நான் இல்லை என்றாலும் வாதிகளுக்கு ஆதரவாக தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் பெயரில் அக்கறையுள்ள சாட்சி என்றாலும், பயிற்சி அளிக்கப்பட்ட சாட்சி என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH　Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.